பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
16 06 2025 6 45
திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- சைப்ரஸ் உடனான பொருளாதார உறவுகளை வலுப்படுத்த இந்தியா உறுதிபூண்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.
- மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் நவீன தொழில்நுட்பம் பயன்படுத்தப்படும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.
- தமிழகம் கடந்த 4 ஆண்டுகளில் பள்ளி இடைநிற்றல் இல்லாத மாநிலமாக உயர்த்தப்பட்டுள்ளதாக முதலமைச்சர் திரு மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.
- தமிழகத்தில் 6 மாவட்டங்களுக்கு உட்பட்ட சில இடங்களில் இன்று கன மழை பெய்யக் கூடும் என வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.
- தமிழ்நாடு பிரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் திருப்பூர் அணி – திருச்சி அணியை வென்றது.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

சைப்ரஸ் உடனான பொருளாதார உறவுகளை வலுப்படுத்த இந்தியா உறுதிபூண்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சைப்ரசில் அரசுமுறைப் பயணம் மேற்கொண்டுள்ள அவர், லிமாசோலில் நடைபெற்ற வர்த்தக வட்டமேசை கூட்டத்தில் பங்கேற்றுப் பேசினார்.

இந்தியாவும் - சைப்ரசும் நீண்டகால நல்லுறவைப் பேணி வருவதாக அவர் தெரிவித்தார்.

தொழில்புரிவதற்கான நடைமுறைகள் இந்தியாவில் எளிமைப்படுத்தப்பட்டுள்ளதாக கூறிய பிரதமர், இதனை சைப்ரஸ் முதலீட்டாளர்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இந்தியாவில் டிஜிட்டல் புரட்சி ஏற்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

உலகின் மொத்த டிஜிட்டல் பணப் பரிவர்த்தனைகளில் சுமார் 50 சதவீதம் இந்தியாவில் நடைபெறுவதாக அவர் குறிப்பிட்டார்.

செயற்கை நுண்ணறிவு, டிஜிட்டல் தொழில்நுட்பங்கள், செமிகண்டக்டர் இயக்கம், முக்கிய கனிமங்கள் இயக்கம், அணுசக்தி இயக்கம் போன்ற முக்கிய முன்முயற்சிகள் இந்தியாவில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக திரு. நரேந்திர மோடி தெரிவித்தார்.

<<<<>>>>

மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் நவீன டிஜிட்டல் தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்படும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

மக்கள் தொகை கணக்கெடுப்பு குறித்து புதுதில்லியில் அதிகாரிகளுடன் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் நேற்று அவர் பங்கேற்றார்.

பின்னர் இது தொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், மக்கள் தொகை கணக்கெடுப்பு குறித்து இன்று அரசிதழ் அறிவிக்கை வெளியிடப்படும் என்று கூறியுள்ளார்.

முதல் முறையாக இந்த மக்கள் தொகைக் கணக்கெடுப்புடன் சாதிவாரி கணக்கெடுப்பும் நடத்தப்பட உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

34 லட்சம் பேர் இந்த கணக்கெடுப்பு பணிகளில் ஈடுபடுத்தப்படுவார்கள் என்றும், ஒரு லட்சத்து 30 ஆயிரம் அதிகாரிகள் இப்பணிகளை ஒருங்கிணைப்பார்கள் என்றும் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

இதனிடையே மக்கள் தொகை கணக்கெடுப்பு இரண்டு கட்டங்களாக நடைபெறும் என்று மத்திய அரசு கூறியுள்ளது.

முதற்கட்டத்தில் ஒவ்வொரு வீடாகச் சென்று தனிநபர் விவரங்கள் சேகரிக்கப்படும் என்றும், இரண்டாவது கட்டத்தில் சமூக, பொருளாதார, கலாச்சார அம்சங்கள் குறித்த தகவல்கள் சேகரிக்கப்படும் என்று உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

தமிழகம் கடந்த 4 ஆண்டுகளில் பள்ளி இடைநிற்றல் இல்லாத மாநிலமாக உயர்த்தப்பட்டுள்ளதாக முதலமைச்சர் திரு மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில் இடைநிற்றல் இல்லாத கல்வி இயக்கத்தில் அனைவரும் இணைய வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்த நிலை தொடர அர்ப்பணிப்புடன் பணியாற்றும் அனைவருக்கும் வாழ்த்துகளை தெரிவிப்பதாக அவர் கூறியுள்ளார்.

காலை உணவுத் திட்டம், நான் முதல்வன், புதுமைப்பெண், தமிழ்ப் புதல்வன் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை மாநில அரசு செயல்படுத்தி வருவதாக திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

கூட்டுறவுத்துறை சார்பில் தமிழகத்தில் அதிக பயிர்க் கடன்கள் வழங்கப்படுவதாக அத்துறைக்கான மாநில அமைச்சர் திரு. கே.ஆர். பெரியகருப்பன் கூறியுள்ளார்.

சென்னையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர். இந்த ஆண்டு கூட்டுறவு வங்கிகள் மூலம் 17 ஆயிரம் கோடி ரூபாய் பயிர்க்கடன் வழங்கப்படும் என்று தெரிவித்தார்.

விவசாயிகளுக்கும், மகளிர் சுய உதவிக் குழுவினருக்கும் அதிக அளவில் கடன் வழங்கப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

நகைக்கடன் தொடர்பாக ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ள வழிகாட்டுதல்கள் கூட்டுறவு வங்கிகளுக்கு பொருந்தாது என்று திரு. கே.ஆர். பெரியகருப்பன் தெரிவித்தார்.

<<<<>>>>

கூட்டுறவு இயக்கம் மக்கள் இயக்கமாக மாற வேண்டும் என்று மகாராஷ்டிர ஆளுநர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

சேலத்தில் கூட்டுறவு இயக்கம் தொடர்பான நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், கூட்டுறவு இயக்கங்களில் அரசின் தலையீடுகள் தவிர்க்கப்பட வேண்டும் என்றார்.

<<<<>>>>

சென்னையை அடுத்த தாம்பரம் பாஸ்போர்ட் சேவை மையத்தின் சார்பில் நடமாடும் பாஸ்போர்ட் சேவை இன்று தொடங்கப்பட உள்ளது.

சென்னை மண்டல அலுவலகத்திற்கு உட்பட்ட புதுச்சேரி, திருவண்ணாமலை பகுதிகளில் இருந்து பெறப்படும் விண்ணப்பங்களை பரிசீலனை செய்யும் வகையில் இந்த நடமாடும் பாஸ்போர்ட் சேவை தொடங்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான வாகனத்தில் கணினி உள்ளிட்ட அனைத்து வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக மண்டல பாஸ்போர்ட் அலுவலகம் கூறியுள்ளது.

தமிழகத்தில் முதல்முறையாக இந்த சேவை தொடங்கப்பட உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

<<<<>>>>

தமிழகத்தில் எதிர்க்கட்சிகளை முடக்கும் வகையில் திமுக அரசு செயல்பட்டு வருவதாக பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

விழுப்புரத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மதுரையில் நடைபெற உள்ள முருக பக்தர்கள் மாநாட்டை தடுக்கும் வகையில் மாநில அரசு செயல்படுவதாக கூறினார்.

இந்த மாநாடு விளம்பரத்திற்காக நடத்தப்படவில்லை என்று அவர் கூறினார்.

சட்டப்பேரவைத் தேர்தலுக்கு பிஜேபி தயாராக உள்ளது என்றும், தேசிய ஜனநாயக கூட்டணியின் தமிழக தலைவர் திரு. எடப்பாடி பழனிசாமிதான் எனவும் திரு. நயினார் நாகேந்திரன் தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழகத்தில் 6 மாவட்டங்களுக்கு உட்பட்ட சில இடங்களில் இன்று கன மழை பெய்யக் கூடும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் ஓரிரு இடங்களில் மிக கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக அந்த மையம் தெரிவித்துள்ளது.

கோவை, திருப்பூர், திண்டுக்கல், தேனி, தென்காசி ஆகிய மாவட்டங்களுக்கு உட்பட்ட சில இடங்களில் கனமழை பெய்யக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

இதனிடையே கன்னியாகுமரி மாவட்டத்தில் கனமழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

நீலகிரி மாவட்டத்திற்கு இன்று மிக கனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதை அடுத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

<<<<>>>>

*<u>இருவரிச் செய்திகள்</u>*

இஸ்ரேல் – ஈரான் மோதலில் அமெரிக்காவுக்கு எந்த தொடர்பும் இல்லை என அந்நாட்டு அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப் கூறியுள்ளார்.

<<<<>>>>

தலைநகர் தில்லியில் காற்றின் தரக் குறியீட்டில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை அடுத்து முதல்நிலை கட்டுப்பாட்டுகளை காற்று தர மேலாண்மை ஆணையம் நீக்கியுள்ளது.

<<<<>>>>

விசாகப்பட்டிணத்தில் சர்வதேச யோகா தினத்தையொட்டி முக்கிய நிகழ்ச்சி நடைபெற உள்ள பகுதிகளை அம்மாநில முதலமைச்சர் திரு. சந்திரபாபு நாயுடு இன்று ஆய்வு செய்கிறார்.

<<<<>>>>

கங்கை ஆற்றில் நீர்வழிப் போக்குவரத்தை மேம்படுத்துவது குறித்து பட்னாவில் தேசிய கருத்தரங்கை உள்நாட்டு நீர்வழிகள் ஆணையம் இன்று நடத்துகிறது.

<<<<>>>>

புவிசார் அடிப்படையிலான நில ஆய்வு தொடர்பான ‘நக்ஷா’ திட்டத்தின்கீழ் இரண்டாம் கட்ட பயிற்சிகளை நான்கு மையங்களில் ஊரக வளர்ச்சி அமைச்சகம் இன்று தொடங்கவுள்ளது.

<<<<>>>>

கடலூர் மாவட்டம், பார்வதிபுரம் கிராமத்தில் உள்ள ஏரியில் மூழ்கி உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு 3 லட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.

<<<<>>>>

தருமபுரி மாவட்டம், அரூர் அரசு மருத்துவமனையில் ஆட்சியர் திரு. சதிஷ் நேற்று ஆய்வு மேற்கொண்டார்.

<<<<>>>>

காஞ்சிபுரம் மாவட்டத்தில் திருநங்கைகளுக்கான சிறப்பு முகாம் வரும் 24ஆம் தேதி நடைபெறும் என்று ஆட்சியர் திருமதி. கலைச்செல்வி மோகன் கூறியுள்ளார்.

<<<<>>>>

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சுற்றுச்சூழல் பாதுகாப்பை வலியுறுத்தும் வகையில் நடைபெற்ற மினி மாரத்தானில் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

<<<<>>>>

மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சகமும், சென்னையில் உள்ள தேசிய சித்த மருத்துவ நிறுவனமும் இணைந்து சென்னை ஆவடியில் இன்று யோகா தினம் தொடர்பான நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்துள்ளன.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

தமிழ்நாடு பிரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் திருப்பூர் அணி திருச்சி அணியை வென்றது.

சேலத்தில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் திருப்பூர் அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

சேலத்தில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் திருச்சி அணி – கோவை அணியை எதிர்கொள்கிறது.

<<<>>>>

அல்டிமேட் டேபிள் டென்னிஸ் போட்டியில் மும்பை அணி பட்டம் வென்றது.

அகமதாபாதில் நேற்று நடைபெற்ற இறுதியாட்டத்தில் அந்த அணி 8–4 என்ற புள்ளிக் கணக்கில் ஜெய்ப்பூர் அணியை வென்றது.

<<<>>>>